செ.வெ.எண்:- 02/2021 நாள்:- 01.03.2021

**தேனி மாவட்டத்தில் மூன்றாவது கட்டமாக 60 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பொதுமக்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஹச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தேனி மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி வழங்கும் பணி துவங்கப்பட்டு முதல் கட்டமாக மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறையின் அலுவலர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கும் இரண்டாவது கட்டமாக முன்கள பணியாளர்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டமாக 45 வயது முதல் 59 வயது வரையிலுள்ள சர்க்கரை மற்றும் இரத்தக்கொதிப்பு போன்ற இணை நோய் கண்ட நபர்களுக்கும் 60 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பொதுமக்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள் பெரியகுளம், போடிநாயக்கனூர், உத்தமபாளையம், கம்பம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ராஜதானி, கடமலைக்குண்டு, கூடலூர், தேனி பொம்மையகவுண்டன்பட்டி, சின்னமனூர் ஆகிய மொத்தம் 10 அரசு நிலையங்களில் கொரோனா தடுப்பூசி வழங்கப்படுகிறது.

இதேபோன்று 01.03.2021 முதல் தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனைகளான என்.ஆர்.டி மருத்துவமனை, நட்டாத்தி நாடார் மருத்துவமனை, கிருஷ்ணம்மாள் நினைவு மருத்துவமனை, வித்யா மருத்துவமனை, தேனி கிட்ஸ் அன்ட் கிட்னி மருத்துவமனை, நலம் மருத்துவமனை, போடிநாயக்கனூர் சண்முகா மருத்துவமனை, கம்பம் ரோஹன் சேகர் மருத்துவமனை ஆகிய 8 தனியார் மருத்துவமனைகளில் கொரோனா தடுப்பூசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம், மருத்துவ பணியாளர்கள், முன்கள பணியாளர்கள் மற்றும் மேற்கண்ட வயது வரம்புள்ள பொதுமக்களுக்கு அரசு மருத்துவமனைகளில் கொரோனா தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும். தனியார் மருத்துவமனைகளில் மேற்கண்ட வயது வரம்புள்ளவர்களில் நபர் ஒருவருக்கு ரூ.250 வீதம் கட்டணம் செலுத்தி கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொள்ளலாம். தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ பணியாளர்கள் மற்றும் முன்கள பணியாளர்களும் கட்டணம் செலுத்தி கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொள்ளலாம்.

கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு செல்லும் பொதுமக்கள் அரசு வழங்கியுள்ள புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகளான பேன் கார்டு (PAN Card) குடும்ப அட்டை, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம், வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஏதேனும் ஒரு ஆவணத்தை கொண்டு செல்ல வேண்டும்.

கொரோனா தடுப்பூசி பெறுவதற்கு பொதுமக்கள் தாங்களாகவே Cowin Portal அல்லது Aarogya Setu போன்ற கைப்பேசி செயலி மூலம் முன்பதிவு செய்துகொள்ளலாம். மேலும் முன்பதிவு செய்துகொள்ளாமலேயே மேற்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை அரசு அல்லது தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்று மருத்துவமனையிலேயே பதிவு செய்தும் கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொள்ளலாம். பொதுமக்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசியை பெற்று பயனடையுமாறு தேனி மாவட்ட ஆட்சியர் திரு ஹச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**